Tamil Sudar, August 11, 2011

டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் சார்பில்

# பள்ளி மாணவர்களுக்கான வினாடிவினா போட்டி

கோவை,ஆக.20-

தகவல் தொழில்நுட்ப சேவைகள், கன்சல்டிங் மற்றும் வர்த்தக தீர்வுகள் அளிப்பதில் முன்னணியில் உள்ள டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் பள்ளிகளுக்கு இடையே இந்திய அளவில் தகவல் தொழில்நுட்ப வினாடிவினா போட்டி நடத்துகிறது. இதன் ஒரு கட்டமாக 2011 டிசிஎஸ் ஐடிவிஸ் கோவை வினாடிவினா போட்டி வருகிற 25-ந்தேதி கோவை ஆர்.எஸ்.புரம், மாநகராட்சி கலையரங்கத்தில் நடைபெறுகிறது. போட்டியில் கலந்துகொள்வுதற்கான விண்ணப்பங்கள் அந்தந்த பள்ளிகள் மூலமாக வருகிற 23-ந்தேதிக்குள் ஐடி விஸ் ஒருங்கிணைப்பாளர், டாடா கன்சல்டன்சி சர்வீசஸ், விஷாலா, 51, காளிங்கராயர் தெரு, ஜி.ஜி.டிராவல்ஸ் வடக்கு, ராம்நகர், கோவை-9 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். இந்த போட்டியில் 8-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களும் பங்கேற்கலாம். நுழைவு கட்டணம் இல்லை.

டி.சி.எஸ் ஐடி விஸ் 2011 பிராந்திய சுற்றுக்கள் அகமதாபாத், ஐதராபாத், பெங்களூர், சென்னை, கோவை, புனே, கொல்கத்தா, புவனேசுவர், கொச்சி, லக்னோ, டெல்லி மற்றும் மும்பை ஆகிய 12 நகரங்களில் நடத்தப்படுகின்றன. பிராந்தியச் சுற்றுக்களை தொடர்ந்து டி.சி.எஸ் ஐடி விஸ் தேசிய சாம்பியன் பட்டத்துக்கான இறுதிச்சுற்று போட்டி வருகிற டிசம்பர் மாதம் நடைபெற உள்ளது. கோவையில் நடக்கும் வினாடிவினா போட்டியில் வெற்றி பெறும் அணி தேசிய இறுதிச்சுற்றில் கோவை சார்பில் பங்கேற்கும்.